**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

அ.வ.எண்.411/2018 வா.சா.1 பூங்கொடி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 11.11.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

9) கடந்த 03-01-2018 அன்று பிரதிவாதிகள் இருதரப்பினர் சொத்தையும் அளவை செய்ய மனு செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அம்மனுவின் பெயரில் எனக்கு நில அளவையர் 31.05.2018 அன்று காலை 10 மணிக்கு அளவை செய்ய வருவதாக அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பு படி அளவை நடந்தால் உண்மை விவரங்கள் தெரிய வரும் என அளவையை தடுத்தேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு தடுத்து பிரச்சனை செய்ததால் பிரதிவாதிகள் 23-11-2018 அன்று பிரதிவாதிகள் போலீசில் புகார் கொடுத்தார் என்றால் அது பொய் புகார் ஆகும். அப்புகாரின் மீதான விசாரணை போலீசார் எங்களை சமாதானம் செய்து நில அளவைக்கு இடையூறு செய்ய மாட்டேன் என என்னிடம் எழுதி பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரியல்ல.

10) அதன் பின்னிட்டு 17-07-2018 அன்று பிரதிவாதிகள் அளவை செய்ய மீண்டும் மனு செய்தனர் என்றால் சரியல்ல. அம்மனுவின் பெயரில் எனக்கு நில அளவையர் 18.12.2018 அன்று காலை 10 மணிக்கு அளவை செய்ய வருவதாக அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் உண்மையானவை என்றும் அதற்கு ஆவணங்கள் உள்ளன என்றும் நான் சுவாதீனத்தில் இல்லாததால் தான் அவை எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

11) நீதிமன்ற ஆணையர் திரு. வினுராஜ் பார்வையிட்டது பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. அது பிரதிவாதிகளுக்கு தெரியும் அவர்கள் அறிவிப்பு பெற மறுத்துவிட்டனர். நீதிமன்ற ஆணையர் திரு. வினுராஜ் நியமிக்க பிறப்பித்த உத்தரவு ஒரு தலைபட்ச உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவு படி நீதிமன்ற ஆணையர் திரு. வினுராஜ் பார்வையிடும் முன் பிரதிவாதிகளுக்கு தெரிவிக்காததால் அவரது அறிக்கையும் , வரைபடமும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

12) வழக்கு சொத்து தடம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அத்தடத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் தான் நான் இவ்வாறு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்னேன் என்றால் சரியல்ல. என் சொத்தின் புல எண்ணின் உட்பிரிவும் பிரதிவாதிகளின் சொத்தின் புல எண்ணின் உட்பிரிவும் வேறுவேறு என்றால் சரிதான். வழக்கு தடம் பிரதிவாதிகளின் சொத்தின் புல எண்ணின் உட்பிரிவில் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை மறுக்க நான் போதிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விவரத்தில் மாமூல் தடத்தை குறிப்பிடாதது என்னிடம் போதிய ஆவணங்கள் இல்லாததால் தான் என்றால் சரியல்ல. எனது சொத்தின் புல எண்ணான 227/1A1 ல் நான் கம்பி வேலி அமைத்து சுவாதீனத்தில் உள்ளேன் என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட பொது தடத்தை விட்டு தான் கம்பி வேலி அமைத்துள்ளேன். மேற்படி சங்கதியை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13) நீ.சா.ஆ. 3 மற்றும் நீ.சா.ஆ. 4 ஆவணங்களில் நான் என் சொத்தில் கம்பிவேலி அமைத்து சுவாதீனத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தடம் பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டதால் அதனை கோரும் எனது வழக்கு

தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. வழக்கு தடத்தில் உரிமை கொண்டாட எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-( மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி